இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 25-01-2025

# பணிந்தது ஒன்றிய அரசு

'டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க மாட்டோம்' என்று அடிபணிந்து விட்டது ஒன்றிய அரசு. சட்டமன்றத்தில் தி.மு.க. அரசு நிறைவேற்றிய தீர்மானத்துக்குக் கிடைத்த வெற்றி இது. போராடிய மக்களுக்குக் கிடைத்த வெற்றி இது.

மதுரை மாவட்டம் - மேலூர் வட்டம் - நாயக்கர்பட்டி கிராமத்தில், டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கு அனுமதியை ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்துக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்கியுள்ளது. 'இன்றியமையாத மற்றும் முக்கியக் கனிமங்களுக்கான உரிமங்களை மாநில அரசின் அனுமதி இன்றி ஒன்றிய அரசு ஏலம் விடக்கூடாது' என்று தமிழ்நாடு அரசு 3.10.2023 அன்று ஒன்றிய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லி இருந்தது. இதனை மீறி ஏலம் விட்டது பா.ஜ.க. அரசு. 'இதனை அனுமதிக்க மாட்டோம்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பிரதமருக்குக் கடிதம் அனுப்பினார் முதலமைச்சர்.

மதுரை வட்டாரத்தில் போராட்டம் நடத்திய மக்களிடம் மாண்புமிகு அமைச்சர் மூர்த்தியை அனுப்பி, 'எந்தச் சூழலிலும் தமிழ்நாடு அரசு அனுமதி தராது' என்று சொல்ல வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சட்டமன்றத்தில் இதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றி, ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தது தமிழ்நாடு அரசு.

அப்போது தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக உறுதியாக ஒரு வாக்குறுதியை அளித்தார்கள்.

- ★ **ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் ஏலம் விட்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், நிச்சயமாகச் சொல்கிறேன். ஒன்றிய அரசு ஏலம் விட்டாலும், நிச்சயமாக, உறுதியாக இந்த அரசு அதற்குரிய அனுமதியைத் தருவதற்கான வாய்ப்பே கிடையாது. அதிலே திட்டவட்டமாக இருக்கிறோம். இதுதான் முடிவு.**
- ★ **திரும்பத் திரும்ப ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன்; நான் முதலமைச்சராக இருக்கிற வரையில் நிச்சயமாக ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முடியாது! வந்தால் அதைத் தடுத்தே தீருவோம்!**
- ★ **திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற வரையிலே, நிச்சயமாக நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டேன்.**
- ★ **எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ்நாட்டிற்குள் ஒன்றிய அரசால் போடப்படக்கூடிய இந்தத் திட்டம், நிச்சயம் வரக்கூடிய வாய்ப்பு இருக்காது, அதைத் தடுத்து நிறுத்துவோம். அப்படி ஒரு சூழல் வந்தால் இந்தப் பொறுப்பில் நான் இருக்க மாட்டேன்; முதலமைச்சர் பொறுப்பில் இருக்க மாட்டேன் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.**

- என்று சொன்னார்கள். இந்த உறுதியானது மேலூர் வட்டாரத்து மக்களை மகிழ்ச்சி அடைய வைத்தது. இதனை மீறி இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியாது என்ற சூழலை ஒன்றிய அரசுக்கும் முதலமைச்சரது உறுதிமொழி உணர்த்தியது. உடனடியாக பா.ஜ.க. அண்ணாமலை மூலமாக ஒரு நாடகத்தை ஆடினார்கள்.

தி.மு.க. அரசின் முழுமையற்ற தகவல்களால் மக்கள் எதிர்த்தார்கள் என்றும், திட்டத்தைக் கைவிட ஒன்றிய அமைச்சரிடம் நானே சொன்னேன் என்றும், மக்களுக்கு எதிராக பிரதமர் செயல்பட மாட்டார் என்றும் ஒரு அறிக்கையை வெளியிட்டார் அண்ணாமலை. மேலூருக்குச் சென்று மக்களைச் சந்திக்கும் நாடகத்தையும் ஆடினார் அண்ணாமலை. **அதாவது திட்டத்தை இனி செயல்படுத்த முடியாது, பின்வாங்கத்தான் வேண்டும் என்ற சூழ்நிலை வந்ததும், 'பா.ஜ.க.வினர் சொல்லி பின் வாங்கியதாக ஒரு நாடகத்தை ஆடியது' ஒன்றிய பா.ஜ.க. அரசு. எப்படியோ பின் வாங்கிவிட்டார்கள்.**

**அ.தி.மு.க. ஆதரவில் நிறைவேறிய சட்டத் திருத்த மசோதாதான், டங்ஸ்டன் சுரங்கத்தை ஏலம் விடும் அதிகாரத்தை மாநில அரசிடம் இருந்து பிடுங்கி மோடி அரசிடம் கொடுக்கக் காரணமானது. டங்ஸ்டன் உள்ளிட்ட சில அரிய கனிமங்களை ஒன்றிய அரசு மட்டுமே ஏலம் விட முடியும் என்கிற சட்டத் திருத்தத்தைத்தான் தம்பிதுரை ஆதரித்தார். இது அம்பலம் ஆனதும், 'நான் டங்ஸ்டனை ஆதரித்து வாக்களிக்கவில்லை' என்று சமாளிக்கிறார் தம்பிதுரை. அவர் ஆதரித்த சட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் டங்ஸ்டன் ஏலத்தை ஒன்றிய அரசு நடத்த திட்டமிட்டது.** எந்த ஒரு சட்டத்தையும் ஆதரிப்பது, எதிர்ப்பது என்பது அதன் விளைவுகளை வைத்துத்தான். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் சட்டத்தை எப்படி ஆதரிக்க முடியும் அ.தி.மு.க.?

இந்தச் சட்டம் மாநிலங்களவையில் தாக்கல் (2.8.2023) ஆனபோது, 'இதனால் மாநில உரிமைகள் பறிபோய்விடக் கூடாது' என்று தம்பிதுரை சொன்னாராம். 'பறிபோகாது, மாநிலங்களின் ஒப்புதல்படிதான் ஏலம் விடுவோம்' என்று ஒன்றிய அமைச்சர் சொன்னாராம். உடனே தலையாட்டி விட்டு தம்பிதுரை ஆதரித்து வாக்களித்துவிட்டார்.

இப்படி இந்தத் திட்டம் வருவதற்கே பழனிசாமியின் கையாலாகாத்தனம்தான் காரணம். எப்போதும் மோடி அ.தி.மு.க. நடத்தும் தம்பிதுரையை பழனிசாமியாலும் ஒன்றும் செய்ய முடியாது. குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து விட்டு மாட்டிக் கொண்டதைப் போல மாட்டிக் கொண்டார் பழனிசாமி.

**இதில் சிக்கிக் கொண்டவர் பழனிசாமிதான். திட்டத்தைக் கொண்டு வரும் பா.ஜ.க.வை எதிர்க்காமல், 'திட்டத்தை எதிர்க்கவில்லை தி.மு.க.' என்று காற்றில் கொம்பு சுற்றினார் பழனிசாமி. 'திட்டத்தை ஒன்றிய அரசு வாபஸ் வாங்காது, இதை வைத்து தி.மு.க.வை கார்னர் பண்ணலாம்' என்று வாய்ப்பந்தல் போட்டார் பழனிசாமி. அவரது ஆசையிலும் மண் விழுந்துவிட்டது. பழனிசாமி எந்த மேட்டர் எடுத்தாலும் ஓரிரு நாளில் முடிவுக்கு வந்து விடுகிறது. அவர் உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது. பாவம்!**



சென்னை - அண்ணா அறிவாலயம் - 'கலைஞர் அரங்கில்' கழகத்தில் இணைந்த மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்டோரை வரவேற்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றிய போது எடுத்த படம்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 8 மாவட்டச் செயலாளர்கள் - ஏராளமான நிர்வாகிகள் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

### கழக மாணவர் அணித் தலைவர் – வழக்கறிஞர் இராஜீவ்காந்தி ஏற்பாட்டில் சென்னை – கலைஞர் அரங்கில் நிகழ்ச்சி!

சென்னை, ஜன. 25 - முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாநில மாணவர் அணித் தலைவர் இராஜீவ் காந்தி ஏற்பாட்டில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (24.1.2025) காலை, மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஒரு மண்டலச் செயலாளர், 8 மாவட்டச் செயலாளர்கள் - 5 ஒன்றியச் செயலாளர்கள் - 9 சார்பு அணி நிர்வாகிகள், 6 தொகுதிச் செயலாளர்கள், 3 எம்.பி. வேட்பாளர்கள் - 6 எம்.எல்.ஏ. வேட்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், துணை முதலமைச்சரும் - இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதிஸ்டாலின், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும் - பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன்

மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் சுப்ரமணி, தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் பழனியப்பன், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன், எம்.எல்.ஏ., கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டா முத்தூர் ரவி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன், எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கழக மாநில மாணவர் அணித் தலைவர் வழக்கறிஞர் இரா.இராஜீவ் காந்தி ஆகியோர் உடனிருந்தனர்.

### மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம்:

# பல்லாவரத்தில் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! – டி.ஆர். பாலு எம்.பி. சிறப்புரை! திறந்தவெளி மாநாடு போல பிரமாண்டமான ஏற்பாடுகள்!

பல்லவபுரம், ஜன.25- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டொன்மெண்ட் பல்லாவரத்தில் இன்று (25-ஆம் தேதி) மாலை நடைபெறும் மொழிப் போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார்.

மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ அன்பரசன் இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு இக்கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுகிறார். பிரமாண்டமான மேடை அமைத்து திறந்த வெளி மாநாடு நடத்துவது போல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று 25-ஆம் தேதி சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில், கண்டோன்மெண்ட் பல்லாவரம், இராஜேந்திரபிரசாத் சாலை, தெரசா பள்ளி அருகில் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு, மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ. முன்னிலையிலும், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வரவேற்புரையிலும் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில், முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை ஆற்றுகிறார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எம்.பி., தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து. மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ. விசுவநாதன்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீ. தமிழ் மணி, ஜி.சி.அன்புச் செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன்,

மற்றும் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் செயலாளர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில - மாவட்ட நிர்வாகிகள், நகராட்சி - பேரூராட்சித் தலைவர், துணைத் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.

கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் நடைபெறும் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தை திறந்த வெளி மாநாடு போல மிகவும் எழுச்சி யுடன் பிரம்மாண்டமான மேடை அமைத்து நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இன்று மாலை 4 மணியளவில், கழக பாடகர் இறையன்பன் குத்தூஸ் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் இன்று (25-ஆம் தேதி) மாலை 4.30 மணிக்கெல்லாம் கண்டோன்மெண்ட் பல்லாவரத்திற்கு அலைகடலென திரண்டு வந்திட வேண்டும் என்று அமைச்சர் தா.மோ. அன்பரசன் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### வரும் பிப்ரவரி 5 ஆம் தேதி

# டெல்லி சட்டசபைத் தேர்தல்!

### காங்கிரஸ் தீவிரப் பிரச்சாரம்!

புதுடெல்லி, ஜன. 25 - 70 உறுப்பினர்களைக் கொண்ட டெல்லி சட்டசபைக்கான தேர்தல் வரும் பிப்ரவரி 5ந்தேதி நடைபெறுகிறது. ஆளும் ஆம் ஆத்மி, காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. என 3 மும்முனை போட்டி நிலவுகிறது.

தேர்தலை முன்னிட்டு பிரச்சாரம் தீவிரமடைந்துள்ள நிலையில், டெல்லிக்கு தற்போது உண்மையான வளர்ச்சி தேவை என ராகுல் காந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், டெல்லிக்கு வளர்ச்சி மட்டுமே தேவை, பா.ஜ.க.வின் போலியான பிரசாரங்கள் தேவையில்லை என குறிப்பிட்டுள்ளார். டெல்லியின் உண்மையான நிலவரம் மக்களின் கண் முன்னே உள்ளது, மோசமான கட்டுமானம், பணவீக்கம், வேலையின்மை ஆகியவை நிலவி வருவதாக குற்றம் சாட்டியுள்ள ராகுல், டெல்லியை தொடச்சியாக 3 முறை ஆட்சி செய்த ஷீலா தீட்சித்தின் அரசை போல், தற்போது டெல்லிக்கு உண்மையான வளர்ச்சி தேவைப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

### வயநாடு நிலச்சரிவு:

# ஒன்றிய அரசு மீது கேரள முதல்வர் குற்றச்சாட்டு!

திருவனந்தபுரம், ஜன.25 - நிலச்சரிவால் பேரழிவை சந்தித்த வயநாடு மறு சீரமைப்புக்கு ஒன்றிய அரசிடமிருந்து இதுவரை எந்த உதவியும் வரவில்லை என கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் குற்றம்சாட்டி உள்ளார்.

கேரள சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில், கேள்வி நேரத்தின் போது, வயநாடு நிலச்சரிவிற்காக ஒன்றிய அரசிடம் பெறப்பட்ட நிவாரணத்தொகை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் பினராயி விஜயன்,

வயநாடு நிலச்சரிவில் உயிர் பிழைத்தவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க ஒன்றிய அரசிடம் முதலில் 2 ஆயிரத்து 221 கோடி ரூபாயை கோரியதாகவும், பேரிடருக்குப் பின்னர் மதிப்பீடு செய்த அறிக்கையின்படி, இன்னும் அதிகமான நிதி எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார். இதுவரை ஒன்றிய அரசிடம் இருந்து எந்த உதவியும் வரவில்லை என குறிப்பிட்ட அவர், முதலமைச்சரின் பேரிடர் நிவாரண நிதியில் பெறப்பட்ட நிதி உயிர் பிழைத்தவர்களுக்கு உதவும் என தெரிவித்தார்.



நேற்று (24.01.2025) சென்னை, கொளத்தூர், பெரியார்நகர் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.109.82 கோடி மதிப்பீட்டில் 97 ஆயிரம் சதுரடியில் 6 தளங்களுடன் கூடுதலாக கட்டப்பட்டு வரும் புதிய மருத்துவமனை கட்டடங்களின் கட்டுமான பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் களஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, பொதுப்பணித்துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ்.மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர் எஸ்.முத்தமிழ் அரசு மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.